**பொலன்னறுவ பிரதேச சபை**
**பொலன்னறுவ மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 18 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 19 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து பொலன்னறுவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்கீட்டுக் கட்டணம், நீதிமன்றத் தண்டப்பண வருமானம், முத்திரைக் கட்டண வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருமானங்கள் மற்றும் செலவுகள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கணக்கீட்டுக் கட்டணத்தின் மதிப்பீட்டுத் தொகை கிடைக்கப் பெறாமையால் அட்டுறு அடிப்படையில் இனங்காண முடியாதிருந்தது. வருமானங்கள் மற்றும் செலவுகள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |

#### (ஆ) கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) பிரதேச சபைக்குச் சொந்தமான 04 காணிகள் மற்றும் மயானங்களின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | காணி மற்றும் மயானங்களை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஆதனக் கணிப்பீட்டின் மூலம் சொத்துக்களை இனங்காணப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கணக்கீடு செய்வேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2019 ஜனவரி முதல் திசெம்பர் வரையான மாதங்களுக்கான பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் 2019 திசெம்பர் மாதத்திற்கான நீதிமன்ற தண்டப்பண வருமானம் என்பவற்றை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முன்னர் குறிப்பிட்ட பொறுப்புச் சொல்ல வேண்டிய நிறுவனங்களிடம் இருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். | குறிப்பிட்ட நிறுவனங்களில் இருந்து அட்டவணைகள் கிடைக்காமையால் கணக்கீடு செய்ய முடியவில்லை. |
| (iii) | 07 வைப்பாளர்கள் தொடர்பாக திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு ரூபா 140,000 தொகை நிதிக்கூற்றுக்களில் வைப்பு மீதிக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணக்கஞ் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வேன். |
| (iv) | மீளாய்வாண்டு திசெம்பர் மாதம் தொடர்பாக மணல் செயற்திட்டத்தின் மூலம் பெற வேண்டிய தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | பெறவேண்டிய வருமானத்தை கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிறுவனத்திடம் குறிப்பிட்ட தொகை தொடர்பாக வினவிய போதிலும் பதில் கிடைக்கவில்லை. சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 41 நீர் நுகர்வோரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 49,940 இற்கான தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | பெறவேண்டிய கட்டணத்தை கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரியான தகவல்களை எதிர்காலத்தில் சமர்ப்பிக்கின்றேன். |

### (இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பண வருமான பதிவேட்டின் படி 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 14,684,087 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களின் படி அம்மீதி ரூபா 16,454,899 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 1,770,812 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது. | இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காரணம் இனங் காணப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கணக்குகள் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதி நிலைமைக் கூற்றின் படி நிர்மாண வேலைக் கடன்பட்டோர் மீதி ரூபா 19,713,995 தொகை எனினும், நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப் பட்டிருந்த அட்டவணையின் படி அம்மீதி ரூபா 21,657,410 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 1,943,415 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | மீதிகளை இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீதிகளின் வித்தியாசம் இனங்காணப்பட்டுள்ளது. 2020 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | நிதி நிலைமைக் கூற்றின் படி கடன்கொடுத்தோர் மீதி ரூபா 21,494,340 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப் பட்டிருந்த அட்டவணையின் படி அம்மீதி ரூபா 23,590,629 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 2,096,289 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | மீதிகளை இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீதிகளின் வித்தியாசம் இனங்காணப்பட்டுள்ளது. 2020 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 46,771,802 தொகைக்கான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதி களை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தயாரித்து சமர்ப்பிப்பேன். ஆரம்ப நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் பொதுக் கணக்கு மீதி தமன்கடுவ பிரதேச சபையை ஒழித்தலின் போது கிடைத்த மீதிகளாகும். |

1.4 இணக்கமின்மைகள்

1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் | | | |
| பிரிவு 16(2) | வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை ஒன்று சமர்ப்பித்திருக்கவில்லை. | செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அறிக்கை தயாரித்து சமர்ப்பிக்கின்றேன். |
| (ஆ) 1988 இன் பிரதேச சபை நிதி மற்றும் நிருவாக விதிக் கோவை | | | |
| (i) விதி 59 | பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு கைத்தொழில்கள் தொடர்பான அட்டவணை ஒன்று தயாரித்திருக்கவில்லை. | கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு கைத்தொழில்கள் இனங்காணப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ii) விதி 203 | சபையின் ஆதனங்கள் தொடர்பாக முழுமையான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | முழுமையான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | முழுமையான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப் பட்டுள்ளது. அறிக்கை எதிர்காலத்தில் சமர்ப்பிப்பேன். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| 2015 ஜுலை 14 திகதிய 03/2015 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப் பட்ட நிதிப் பிரமாணம் 371(5) | குறிப்பிட்ட கருமம் பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றுக்கொண்ட முன்பணத் தொகையை தீர்க்க வேண்டியிருந்த போதிலும், 07 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 100,000 பெறுமதியான முற்பணத் தொகைகள் 16 நாட்கள் முதல் 187 நாட்கள் வரையான காலம் தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கால தாமதமின்றி முற்பணம் தீர்க்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

(ஈ) ஏனைய சுற்றறிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் 02/2017 இலக்க 2017 திசெம்பர் 27 திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | பொலன்னறுவை பிரதேச சபைக்கு வழங்கியிருந்த கொம்பெக்டர் வண்டியின் உரிமையை சபையின் பெயருக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிமையை சபையின் பெயருக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இம் மாதத்தினுள் அதனை உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் நிர்மாண வேலை கடன்பட்டோர் எனக் காட்டப்பட்டிருந்த ரூபா 19,713,996 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதுவரை நிர்மாண வேலை கடன்பட்டோரில் ரூபா 12,487,033 தொகை கிடைத்திருந்தது. |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் என காட்டப்பட்டிருந்த ரூபா 23,590,629 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிர்மாண வேலை கடன்கொடுத்தோரில் ரூபா 11,460,160 தொகை செலுத்தப்பட்டுள்ளது. |

**2 நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதி இறுதியில் உள்ளவாறு சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,442,547 தொகையாகக் காணப்பட்டது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2019<br>மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,516,030 | 2,850,403 | 1,771,193 | 1,079,210 |
| வாடகை | 1,724,608 | 2,472,716 | 2,472,716 | - |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 578,500 | 440,265 | 440,265 | - |
| ஏனைய வருமானங்கள் | 23,879,100 | 40,531,819 | 10,582,777 | 29,949,042 |
| மொத்தம் | 27,698,238 | 46,295,203 | 15,266,951 | 31,028,252 |

**2.2.2 வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரி**<br>மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய வீதவரி ரூபா 1,466,110 தொகையில் நூற்றிற்கு 38 ஆகிய ரூபா 560,042 தொகையே சேகரிக்கப்பட்டிருந்தது. | வீதவரி சேகரிக்கும் விடயம் வினைத்திறனுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். | தொடர்ந்தும் நடமாடும் சேவை நடாத்தப்பட்டு வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | வீதவரி செலுத்துவோர்கள் 49 பேரிடம் தொடர்ந்தும் வருடாந்தம் அறவிடப்பட வேண்டிய வரித் தொகை அறவீடு செய்யப்படாமை யால் 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 317,739 தொகையொன்றும் இருந்தது. | நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வீதவரியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**(இ) குப்பை வரி வருமானம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக குப்பை வரி அறவீடு செய்வதற்கு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும், குப்பை வரி அறவிடப்படக் கூடிய நிறுவனங்கள் தொடர்பான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் சபைக்கு அறவிடக்கூடியதாக இருந்த குப்பை வரி வருமானத்தை இழந்துள்ளது. | குப்பை வரி அறவிடப்படக் கூடிய நிறுவனங்களை இனங்கண்டு கட்டணங்களை அறவிடப்பட வேண்டும். | நடைமுறை ஆண்டிற்கான குப்பை வரி அறவீடு செய்யக்கூடிய நிறுவனங்கள் தொடர்பாக பதிவேடு ஒன்று தயாரித்தல் மேற்கொள்ளப் பட்டுள்ளது. |

**(ஈ) நீர் வரி வருமானம்**

| | | |
|---|---|---|
| 2016 ஆண்டு முதல் 2018 ஒக்தோபர் 31 திகதி வரை சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த மொத்த நிலுவை வருமானம் ரூபா 48,433 தொகை ஆகும். | வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 84,315 தொகையான நிலுவை நீர் கட்டணத்தின் 2020.05.27 திகதி வரை ரூபா 35,882 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளது. |

**2.2.3 வாடகை**

**இயந்திர வாடகை வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மோட்டர் கிரேடர் இயந்திரம் மற்றும் பெக்கோ லோடர் வாடகை அடிப்படையில் வழங்கியிருத்தல் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 297,025 இற்கான தொகையினை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டின் போது ரூபா 246,025 இற்கான தொகையொன்று கிடைத்திருந்தது. மீதித் தொகையை அறவீடு செய்வதற்காக நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| **விளம்பர அறிவித்தல் கட்டணம்** | | |
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கணிசமான அளவு அறிவித்தல் பலகைகள் அவதானிக்கப்பட்ட போதிலும், அவற்றை இனங்கண்டு வருமானம் சேகரிப்பதற்கு சபைக்கு இயலாமல் உள்ளது. | கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு வருமானத்தை இனங்காண வேண்டும். | எதிர்காலத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு வருமானம் சேகரிக்க நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.5 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 16,454,899 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 13,494,143 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. | குறிப்பிட்ட பொறுப்புச் சொல்ல வேண்டிய நிறுவனங்களிடம் இருந்து பணத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண சபை ஆளுனரிடம் பணம் அனுப்பும் படி விண்ணப்பித்துள்ளேன். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2020 செயல் நடவடிக்கைத் திட்டம் குறைபாடுகள் நிவர்த்தி செய்து தயாரிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்த நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், அந்த குறிக்கோள்கள் இடையே சபைக்குரிய இலக்குகளை சரியாக இனங்கண்டிருக்காததுடன், குறிக்கோள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டி களுக்காக தரவுகளை சேகரிக்கும் நடைமுறை ஒன்று காணப் படவில்லை. 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்கான நிலைபேறான | சபைக்கான குறிக்கோளை இனங்காணல், தரவு சேகரிக்கும் நடைமுறை ஒன்றை தயாரித்தல், நிதி ஏற்பாடு மேற்கொள்வதற்காக தொடர்புடைய நிறுவனங்களை இனங்காண வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

| | | |
|---|---|---|
| அபிவிருத்தி இலக்குகளை நோக்கி நெருங்குவதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. இலக்குகளை நோக்கி நெருங்குவதற்காக பதவியணியினரை பயிற்சிவிக்கும் நடைமுறை ஒன்று மற்றும் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக தொடர்பு ஏற்படுத்த வேண்டிய ஏனைய அரச நிறுவனங்களை இனங்கண்டிருக்கவில்லை. | | |

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தமன்கடுவ பிரதேச சபையின் சொத்துக்களை பகிரும் போது பொலன்னறுவ பிரதேச சபைக்கு சொந்தமான கணினிகள் மற்றும் சில துணைக்கருவிகள் பொலன்னறுவ மாநகர சபையினால் பயன்படுத்தப் பட்டிருந்த போதிலும் அவற்றை திருப்பப் பெறுவதற்கு, தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணினிகள் மற்றும் துணைக்கருவிகளை பெற்றுக்கொள்வதற்கு அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொலன்னறுவ மாநகர சபைக்கு எழுத்துமூலம் அறிவித்த போதிலும் இதுவரை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**3.3.1 ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயலாளர் பதவி 2017 ஜுலை முதல் வெற்றிடமாக காணப்பட்ட போதிலும் பதில் கடமை பெண் செயலாளர் ஒருவர் கடமைகளை மேவகை செய்கின்றார். | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பல சந்தர்ப்பங்களில் உள்ளுராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஆரம்ப மற்றும் இரண்டாம் மட்ட 32 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | பல சந்தர்ப்பங்களில் உள்ளுராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 3.3.1 ஊழியர் கடன

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 முதல் 2017 வரையான காலப்பகுதியில் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 03 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 64,585 இற்கான கடன்மீதி ஒன்றும், 2016 ஆண்டில் இறந்த ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 7,800 இற்கான கடன்மீதி ஒன்றும், 2019 ஆண்டு ஓய்வு பெற்ற ஊழியர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 3,600 இற்கான கடன் மீதியொன்றினையும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடன் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஓய்வு பெற்ற உத்தியோகத்தரின் ஓய்வூதியத்திலிருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இறந்த உத்தியோகத்தரின் மீதி தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரிடம் ஆலோசனை கேட்டுள்ளேன். |
| (ஆ) | 2015 இல் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 7,680 இற்கான கடன் தொகை மற்றும் சேவையை விட்டு சென்றுள்ள உத்தியோகத்தர் / ஊழியர்கள் 06 பேரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 17,500 இற்கான விசேட முற்பணத்தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடன் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுவடிக்கூடத்தில் எழுத்து மூல சான்றுகள் இன்மையால், ஆலோசனைக்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான முள் மற்றும் டிரக்டர் வண்டி ஒன்று 03 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் விளைவற்று காணப்பட்டது. | விளைவற்ற சொத்துக்களை இனங்கண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019.12.31 திகதி பண்டக் கணிப்பிட்டு சபையினால் ஏல விற்பனை செய்வதற்காக தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் சரி செய்வேன். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் 03 மாத்திரம் நடாத்தப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவக்குழு நடாத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |